# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,107 — 1960 අප්‍රේල් 14 වැනි බ්‍රහස්පතින්දා — 14.4.1960

12,107 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 14 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 91 | ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 93 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 93 | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### புகையிரதப் பாதை வேலைப் பகுதி

#### விசேட தொழில் பயில்வோர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு

விசேட தொழில் பயில்வோர் தரத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு, இலங்கை அரசாங்க சேவைப் பாதை வேலைப் பகுதியில், கட்டடம், நிரந்தர பாதை வேலை, பாலங்கள், சைகைச் செய்தி, பார்க்குழி முதலிய கிளைகளில் இரண்டாந்தர முகாரிப் பதவிகளை நிரப்புவதற்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேவையான தராதரங்கள்

(அ) விண்ணப்பதாரர் இலங்கையராயிருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத்தேதியன்று, விண்ணப்பதாரர்கள் 16 வயதுக்குக் குறையாமலும் 21 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அத்துடன் நல்ல தேகக்கட்டுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) அவர்கள் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் கணிதத்துடன் சித்தியெய்தியவர்களாகவோ அல்லது இதற்குச் சமமாகவோ அல்லது கணிதத்துடன் கூடிய வேறு உயர்ந்த பரீட்சையில் சித்தியெய்தியவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஈ) அவர்கள் திருமணம் செய்யாதவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—மேல் கூறப்பட்டுள்ள கல்வித்தகைமை உடைய புகையிரத ஊழியர்கள் 21 வயதிற்கு மேற்பட்டவர்களாயினும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியன்று 50 வயதுக்கு மேற்படாமலிருந்தால் விண்ணப்பஞ்செய்யலாம்.

3. (அ) இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பொது நிபந்தனைகளின் பிரகாரம் வயதுச் சலுகை கோரும் முன்னை நாள் மாஜி சேவை இராணுவ வீரர்கள் தங்களுடைய திருப்திகரமான சேவையை நிரூபிக்கும் முகமாக வேலை நீக்க மூலப் பத்திரத்தை அனுப்புதல் வேண்டும். இவைகளுடன் அப்பத்திரத்தில் சேவையின் காலம் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) சென்ற யுத்தத்தில் கைதியாகவிருந்து அதற்குத் திருப்திகரமான அத்தாட்சி காட்டினுல் அக்கைதியாக இருந்த காலத்தை, வயதெல்லையைக் கணக்கிடும் தேவைக்காகக் கழிப்பதற்கு இயலும்.

(இ) கீழ்க் கூறப்பட்டுள்ள நிபந்தனைக்கிணங்க இலங்கையிலுள்ள பல்வேறு ஐக்கிய இராச்சிய தாபனங்களின், கடற்படை அல்லது விமான அமைச்சினுலும் ஆட்குறைப்புக்காரணமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட இராணுவத்தினரல்லாத பொது உத்தியோகத்தர்கள் குறிக்கப்பட்டுள்ள வயது எல்லைக்குள் அமையவேண்டியதற்காக, தங்களுடைய வயதிலிருந்து ஐக்கிய இராச்சிய சேவையிலிருந்த வயதைக் கழிக்க அனுமதிக்கப்படுவர் :—

(i) அவர்கள் மற்றேனைய அம்சங்களிலெல்லாம் தகைமை உடையவர்களாயிருத்தல் வேண்டும் ;

(ii) அவர்களின் அத்தகைய சேவை திருப்திகரமாகவும் தொடர்பாகவும் இருந்திருத்தல் வேண்டும் ;

குறிப்பு.—இந்தப் பந்தியிலுள்ள பகுதிகளில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பதாரர்கள் திருமணஞ் செய்திருந்தால் அது ஒரு தகைமைக் குறைவாகாது.

4. விண்ணப்பத்துடன் கீழ்க்கூறப்பட்டுள்ள மூலப் பத்திரங்களல்லாது, பிரதிகள் மட்டுமே இணைக்கப்படல்வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் முடிவுத்தேதியன்று விண்ணப்பதாரர் 16 வயதிற்குக் குறையாதவர் என்பதையும் 21 வயதிற்கு மேற்படாதவர் என்பதையும் குறிக்கும் பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(பாடசாலைகளில் சேர்வதற்காகக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ், சத்தியக் கடுதாசி, அல்லது ஞானஸ்நானப் பத்திரம், பிறப்புச் சாட்சிப் பத்திரத்துக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) உயர்தரக் கல்வித் தராதரப் பத்திரங்கள்.

5. விண்ணப்பத்துடன் ஒரு தகுதி வாய்ந்தவரால் ஒப்பமிடப்பட்ட நன்னடைப்பத்திரம் இணைக்கப்படல் வேண்டும். அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையில் பரீட்சார்த்தி கல்வி பயின்றிருந்தால் நன்நடத்தைப் பத்திரம் அவர் கடைசியாகக் கல்வி பயின்ற அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலை அதிபரிடமிருந்து பெறல் வேண்டும் ; அல்லது அது ஒரு சமாதான நீதவான், அத்துவக்காத்து, பிரக்கிராசி, அல்லது நொத்தாரிசு, பகுதிக்காரியாதிகாரி, அல்லது வருடமொன்றுக்கு 2,400 ரூபா அல்லது அதிற்கூடிய சம்பளம்பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர், அல்லது பொதுவாகக் கூறுமிடத்து ஒரு பிரபல்யமானவரும், இலகுவில் தொடர்பு வைக்கக்கூடியவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அப்பத்திரம் அளிப்பவருடைய பெயர், நியமனம், விலாசம் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். (ஏற்கனவே அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிப்போர் நன்நடத்தைப்பத்திரம் இணைக்கத் தேவையில்லை).

6. விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில், கீழ்க்காணும் மாதிரிப் படிவப் பத்திரத்திற்கிணங்க விண்ணப்பமிருக்க வேண்டும். விண்ணப்பத்தோடு இணைக்கப்படவேண்டிய பிரதிகளும் இணைத்து அனுப்புதல் வேண்டும். மூலப்பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்கே சமர்ப்பித்தல் வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்பெறமாட்டா.

விண்ணப்பப்பத்திரங்கள் இப்பகுதியிலுள்ள எவராவது ஒரு உத்தியோகத்தரின் இயற் பெயருக்கு அனுப்பாது தலைமை அதிபர், இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி, கொழும்பு என்று விலாசமிட்டு, விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்வதற்குரிய இறுதித் திகதி 29.4.60 வெள்ளிக்கிழமை, பிற்பகல் 4.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

7. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து குறித்த திகதிக்குப் பின் கிடைக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன், விண்ணப்பதாரரின் பகுதித் தலைவரிடம் கிடைக்கப்பெற்று, பகுதித் தலைவர் தாமதத்தின் காரணத்தை விளக்கி விதந்துரைத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

8. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கையில் எப்பாகத்திலேனுஞ் சேவை புரிவதற்குக் கண் பார்வை உட்பட உடற் தகுதி வாய்ந்தவர்களெனக் காட்டுவதற்கு உடனடியாக ஒரு வைத்தியப் பரிசோதனையில் தேறுமாறு வேண்டப்படுவர்.

**9. சேவையின் நிபந்தனைகள்**

(அ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் 4 வருடம் பயிற்சி பெறுதல் வேண்டும். அவர்கள் கடமை புரியவேண்டிய குறிப்பிட்ட பிரிவின் செயலாற்றுப் பயிற்சி முறை விபரம் பின் வருமாறு :—

**கட்டிடப் பகுதி**

| | | |
|---|---|---|
| 6 மாதம் | .. | இரத்மலானை தொழிற்களம் |
| 1 வருடம் | .. | வரையும் அலுவலகம், அளத்தல் (தொடக்கப்பகுதி) |
| 2½ வருடம் | .. | அலுவலகம், நேரங்குறித்தல், செய்முறைக்குரிய பயிற்சி அனுபவம். முதல் வருடம் கொழும்பு மாவட்டப் பகுதியில். |

**நிரந்தர வேலைப் பகுதி**

| | | |
|---|---|---|
| 6 மாதம் | .. | இரத்மலானை தொழிற்களமும் தெமட்டகொடை நிரந்தர பாதைக்களமும் |
| 6 மாதம் | .. | வரையும் அலுவலகம், அளத்தல் (தொடக்கப் பகுதி) |
| 1 வருடம் | .. | அலுவலகம், நேரங்குறித்தல், செய்முறைக்குரிய அனுபவம், சிறப்பாக கொழும்பு மாவட்டப் பகுதியில் |
| 2 வருடம் | .. | செய்முறைக்குரிய அனுபவம் |

**பாலப் பகுதி**

| | | |
|---|---|---|
| 6 மாதம் | .. | இரத்மலானை தொழிற்களம் |
| 1 வருடம் | .. | பாலக்களமும், காலேயும், அளத்தல் (தொடக்கப் பகுதி) |
| 2½ வருடம் | .. | அலுவலகமும், வரையும் அலுவலகத்திலும், நேரங்குறித்தல், செய்முறைக்குரிய பயிற்சி. முதல் வருடம் வரையும் அலுவலகத்திலும், தெமட்டக் கொடைக் காலையிலும் |

**சைகை காட்டும் பகுதி**

| | | |
|---|---|---|
| 6 மாதம் | .. | இரத்மலானை தொழிற்களம் |
| 1 வருடம் | .. | சைகைப் பொறியியலாளர் தொழிற்களம், தெமட்டகொடை |
| 2½ வருடம் | .. | அலுவலகம், வரையும் அலுவலகத்திலும், நேரங் குறித்தல், செய்முறைக்குரிய அனுபவம், முதல் வருடம், வரையும் அலுவலகம். சைகை அலுவலகம், கொழும்புப்பிரதேசம் |

**பார்க்குழிப் பகுதி**

| | | |
|---|---|---|
| 9 மாதம் | .. | இரத்மலானை தொழிற்களம் |
| 3 மாதம் | .. | வரையுங்கந்தோர், அளத்தல் (தொடக்கப் பகுதி) |
| 3 வருடம் | .. | மாவட்டப் பார்க்குழி அலுவலக வேலை, நேரங் குறித்தல், செய்முறைக்குரிய பார்க்குழி அனுபவம் |

(ஆ) பயிற்சி பெறுங்காலத்தில், தொழில் பயில்வோர் பட்டோலே " அ " வில் குறிப்பிட்ட பாடங்களைப் பயில்வதோடு, இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் விதிக்கப்பட்ட வகுப்புகளிற் சேர்ந்துபடித்து வேண்டிய சான்றிதழ்கள் பெறவேண்டும்.

(இ) தொழில் பயில்வோர், மூன்றுவருடப் பயிற்சி முடிவடையு முன்னர், திணைக்களவிதிகள், நேரங்குறித்தல் மற்றும் பாடத்திட்டத்தில் குறிப்பிட்ட தேவையான பாடங்களிற் சித்தியெய்தல் வேண்டும். இதிற் சித்தியெய்தும் வரைக்கும் இத்திட்டப்படி மேலும் தொடர்ந்து படிப் பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். நாலு வருட இறுதியில் சித்தி யெய்தத்தவறின் தொழில் பயில்வோர் நிறுத்தப்படக்கூடும். ஐந்து வருடப் பயிற்சி முற்றுப்பெறமுன், தொழில் நுட்பப் பாடங்களிலும் இன்னுமொரு தேர்விலும் சித்தியடையவேண்டும். இங்ஙனம் சித்தி யடையத்தவறின் நிறுத்தப்பட வேண்டியும் நேரும்.

(ஈ) தொழில் பயில்வோர், பயிற்சி பெறுங்காலத்தில் சிங்களத்தில் தேர்ச்சி பெறுதல்வேண்டும். 2 ந் தர முகாரிப் பதவிக்கு நியமித்தல் ஏனைய கட்டுப்பாடுகளோடு சிங்களத்தில் தேர்ச்சியடைவதைப்பொறுத் துள்ளது.

தொழில் பயில்வோர், அரசாங்க மொழிக் கொள்கையையொட்டி ஏற் படுத்திய அல்லது ஏற்படுத்தவுள்ள எப்பிரமாணங்களும், முக்கியமாக 1956 ம் ஆண்டைய 33 ம் இலக்க அதிகாரச் சட்ட ஏற்பாடுகளின் செயல் முறைகளுக்கு அமைதல் வேண்டும்.

(உ) பரீட்சையின் இரு பகுதிகளையும் முற்றுவித்து நான்காண்டுத் தொழிற் பயிற்சியை நிறைவாக்கி முடித்த பின்னர் அபேட்சகர்கள் தகுதியுடையவராயின், பயிற்சி முடிவடைந்த காலத்தில் வழங்குஞ் சம்பளத்தில் சேவையில் அமர்த்தப்படுவர். 2 ந் தரப்பிரிவு முகாரிப் பதவிகளில் இடங்கள் காலியாகுந்தறுவாயில் இவர்கள் தகுதியுடையவ ராயின், நிரந்தர முகாரி 2 ந் தரப்பிரிவுக்குடைய அடிப்படைச் சம்பளத் தில் இப்பகுதிகளுக்கு உயர்ச்சிபெறுவர்.

பயிற்சி முடிந்ததும், நிரந்தரப்பதவிக்கு நியமிப்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கொடுக்கப்படமாட்டாது.

(ஊ) தொழில் பயில்வோர் நடைமுறையில் உள்ளதாகிய மணித் தியாலங்களுக்கு வேலைசெய்தல் வேண்டும். அத்துடன் தங்கள் இருப்புச் சொத்து இவ்வளவென ஒரு அறிக்கையை " யி 261 " ஆம் படிவத்தில் சமர்ப்பிக்கவும் வேண்டும்.

(எ) தொழில் பயில்வோர் நடைமுறையிலுள்ளனவாகிய திணைக்கள விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடக்க வேண்டும். ஒழுங்காற்றை மீறல், கெட்ட நடத்தை மற்றும் குற்றங்களுக்குத் தண்டனைகள் பிரதம அதிபரால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரால் விதிக்கப் படும்.

(ஏ) தொழில் பயில்வோர், அரசாங்க சேவைக்குழு விதிகள், நிதிப் பிரமாணங்கள், நடைமுறைக் கைந்நூற் பிரமாணங்கள், இலங்கை அரசாங்கப் பகுதித் திணைக் களக் கட்டளைகள், இன்னும் அரசாங்கத் தாலும் இத்திணைக்களத்தாலும், காலத்துக்குக்காலம் விடுக்கப்படும் ஏனைய பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டவராவர்.

**பட்டோலே " அ "**

**2 ந் தர முகாரியாக வேலை உயருமுன் படிக்கவேண்டிய பாடங்கள்**

| | | |
|---|---|---|
| கட்டிடப் பகுதி | .. | புகையிரதப் பகுதித் திணைக்களங்களின் விதிகளும் நேரங் குறித்தலும். கட்டிட அமைப்பு (தொடக்கப் பகுதி) மதிப் பீடுகளும் அளவுகளும் |
| நிரந்தரப்பாதைப் பகுதி | .. | தொடக்கப் பகுதி வரைதலும் ஓவியங் கோட்டலும், புகையிரதப் பகுதித் துணைத்திணைக்களங்களின் விதிகளும் நேரங் குறித்தலும் |
| | | நிரந்தரப்பாதை.—" கோல் " கைந்நூலை யும், ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கைந் நூல்களையும் ஆதாரமாகக் கொண்ட கேள்விகளும், நிரந்தரப் பாதையைப் பற்றிய எளிதான கணிதப் பகுதியும் |
| பாலப் பகுதி | .. | புகையிரதப் பகுதித் துணைத்திணைக்களங் களின் விதிகளும் நேரங்குறித்தலும். பிரயோகப் பொறியியல் : தொடக்கம் பகுதி |
| சைகை காட்டும் பகுதி | .. | புகையிரதப் பகுதித் துணைத்திணைக்களங் களின் விதிகளும் நேரங்குறித்தலும். பிரயோகப் பொறியியல் : தொடக்கப் பகுதி |
| பார்க்குழிப் பகுதி | .. | புகையிரதப் பகுதித் துணைத்திணைக்களங் களின் விதிகளும் நேரங்குறித்தலும். பிரயோகப் பொறியியல்; தொடக்கப் பகுதி பார்க்குழி வேலைப் பாதுகாப்பு விதிகள் |

10. தொழில் பயில்வோர் (அவருடைய பெற்றோரும்/பாரபரிப் போரும்) தாம் தொழில் பயிலும் முழுக்கால எல்லையாகிய (4 ஆண்டு களுக்கும்) இலங்கை அரசாங்கப் பகுதியில் கடமைசெய்வோமென்றும், 2 ந் தர முகாரிப்பதவி நியமனத்திகதியிலிருந்து மேலும் 5 ஆண்டுகளுக் குக் கடமை செய்வோமென்றும், ஒரு ஒப்பந்த முறியில் கையொப்பம் வைத்தல் வேண்டும்.

11. தொழில் பயில்வருடைய நடத்தை திருப்திகரமில்லாவிடில் அல்லது பயிற்சியில் திருப்திகரமான முன்னேற்றமில்லாவிடில் அல்லது வேறு எக்காரணத்தினாலும் அவர் தொடர்ந்து பயிற்சி பெறுதல் சேவைக்கு நலன் அற்றதாக இருப்பின், முன்னறிவித்தல் இன்றி, உடன் படிக்கையை இரத்துச்செய்யும் உரிமை பிரதம தலைவருக்கு உண்டு.

12. பல்வேறு படிகளில் சம்பள அளவுத்திட்டம் :

**தொழில் பயிலுங் காலம்**

| | | |
|---|---|---|
| 1 ம் ஆண்டு | .. | ரூ 2.20 நாள் ஒன்றிற்கு |
| 2 ம் ஆண்டு | .. | ரூ .2.60 ,, |
| 3 ம் ஆண்டு | .. | ரூ. 3.00 ,, |
| ° 4 ம் ஆண்டு | .. | ரூ. 3.40 ,, |
| °° 4 ம் ஆண்டு | .. | ரூ. 3.80 ,, |

° = திணைக்கள முதற் பரீட்சையில் தேறியபின்

°° = திணைக்கள இரண்டாம் பரீட்சையில் தேறியபின்

**2 ந் தர முகாரி**

ரூ. 1860—120—ரூ. 3780 ஆண்டு ஒன்றிற்கு.

**1 ந் தர முகாரி**

ரூ. 3900—180—ரூ. 5340 ஆண்டு ஒன்றிற்கு.

13. பயிற்சிபெறுமொருவர், அவர் பயிற்சியில் ஒரு படியிலிருந்து மேற்படிக்குச் செல்லுமுன், அவருக்கு நேரே மேலுள்ள அதிகாரியிடம் நல்லதொரு சான்றிதழ் பெற்றுகவேண்டும். ஒழுங்கான வரவு, நேரந் தவறாமை, நல்லியல்பும் கடமையில் விருப்பும், பொதுத்திறமை, நன்னடை, தளராமையுந் தொழிலாளரை ஆளுந்திறனும் ஆகிய வற்றுல் இவர் தேரப்படுவர்—தொழில் பயிலும் ஒருவர் தமது பயிற்சி ஒழுங்கில் அடுத்தபடிக்கு ஏறுமுன், நோயும், அனுமதியுடனும், இன்றி யும் பிறவற்றுல் வராமையுங் காரணமாக இழந்த முழுநேரத்தையும் நிறைவாக்கும்படி கேட்கப்படக்கூடும். திருப்தியான முன்னேற்றத்தைப் பொறுத்தே சம்பள உயர்வு கொடுக்கப்படும்.

14. 2 ந் தர முகாரியிலிருந்து 1 ந் தர முகாரியாகப் பதவி உயர்த்தல், ஆளில்லாமை ஏற்படுவதிலும், குறித்த உத்தியோகத்தர் தகுதியுடை மையிலுந் தங்கியிருக்கும்.

15. தலைமை அதிபதி யாதாயினுமொரு விண்ணப்பத்தைக் காரணங் காட்டாமல் தள்ளிவிடும் தனி உரிமையுடையவர்.

16. இந்த வர்த்தமானியின் தொடக்கத்தில் I ம் பகுதி, பிரிவு II ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்கசேவைப் பதவிகளின் நியமனங்களுக் குரிய பொது நிபந்தனைகளைக் கவனிக்குமாறு கோரப்படுகிறது.

பி. டி. நம்பால,
தலைமை அதிபர்.

தபால் பெட்டி இல. 355,
கொழும்பு, 1960 ம் ஆம் ஏப்றில் மீ 6 ந வ.

**மாதிரிப் படிவ விண்ணப்பப் பத்திரம்**

**இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி—பாதைவேலைப் பிரிவு**
**விசேட தொழில் பயில்வோர் பதவிக்கு விண்ணப்பம்**

1. முழுப் பெயர் (பெரிய எழுத்தில்) : ————.

   குடும்பப்பெயர் அதாவது இறுதிப்பெயர் : ————.

   மற்றைய பெயர்கள் : ————.

2. தபால் முகவரி (பெரிய எழுத்தில்) : ————.

3. தேசிய இனம் : ————.

   (அ) பரம்பரை இலங்கைப்பிரசை, அல்லது (ஆ) பதிவால் இலங்கைப் பிரசை, பரம்பரையால் இலங்கைப் பிரசை எனில் கீழ்க்காணும் விபரங்கள் தருக.

   பிறப்பிடம்—

   (அ) விண்ணப்பதாரியின் : ————.

   (ஆ) விண்ணப்பதாரியின் தந்தையின் : ————.

   (இ) விண்ணப்பதாரியின் தந்தைவழிப்பேரனின் : ————.

   (ஈ) விண்ணப்பதாரியின் தந்தைவழிப்பூட்டனின் : ————.

விண்ணப்பதாரி இலங்கையில் பிறந்தவராயின் (அ) வை நிரப்புவ தோடு, ஒன்றில் (ஆ) அல்லது (இ) (ஈ) இரண்டையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவரல்லவராயின் (அ) வை நிரப்புவதோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யை யும் (ஈ) யையும் நிரப்புதல்வேண்டும்.

4. (அ) பிறந்த திகதி : ————.
   (பிறப்புப்பதிவிதழ் அணைக்கப்படவேண்டும்)

   (ஆ) 29.4.60 தேதியில் வயது.
   ———— ஆண்டு ———— மாதம் ———— நாள்.

5. தேறிய தேர்வுகள் : ————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் அணைக்கப்படவேண்டும்)

6. மணம்முடித்தவரா தனியாளா : ————.

7. புகையிரதப் பகுதி உத்தியோகத்தரா அல்லது புகையிரதப்பகுதி உத்தியோகத்தரின் மகனா (சுருக்கி விபரந் தருக) : ————.
   புகையிரதப் பகுதி உத்தியோகத்தராயின், முதல் நியமனத் திகதியும், இப்போதைய தரமுங்கூறுக : ————.

8. இப்போது பார்க்கும் உத்தியோகம், உளதெனில் : ————.

9. மாஜி இராணுவ வீரரோ, யுத்தக்கைதியோ அல்லது இலங்கையி லுள்ள பல்வேறு ஐக்கிய இராச்சிய தாபனங்களிலும், கடற்படைப் பகுதியாலும், விமானப்படைஅ மைச்சினாலும் ஆட்குறைப்புக் காரணமாக வேலையினின்றும் நிறுத்தப்பட்ட இராணுவத்தின ரல்லாத பொது உத்தியோகத்தரோ (உறுதிப்பத்திரங்களுடன் விபரந் தருக) : ————.

10. யாதானுமொரு குற்றஞ்சாட்டப்பட்டு அல்லது அதற்காக அழைக்கப் பட்டு, குற்றப்பட்டதுண்டோ ? அங்ஙனமாயின் அக்குற்றத்தேதி, குற்றவகை, நீதிமன்றப் பெயர், வழக்கிலக்கம் தருக : ————

இங்கு என்னுல் கூறப்பட்ட வாக்குமூலம் என்னறிவுக்கும் தம்பிக்கைக் கும் எட்டிய அளவில் உண்மையானவையென என் கண்ணியத்தின்பேரால் உறுதிப்படுத்துகிறேன். இவ்வாட்சேர்ப்புக்குரிய பிரமாணங்களின்படி யான் தகுதியிலனாய்க்காணப்படின் எனது விண்ணப்பம் நீக்கப்பட்டதாய்க் காணப்படும் என்பதையும் யானறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

**உறுகாமம் நீர்ப்பாசன உபபிரிவில் உள்ள மாவடி ஓடையில் தொழிலாளர் வசிக்கும் இரட்டைக் குடிசை கட்டுதற்கு நீர்ப்பாசனப் பகுதியில் ரூபா 13,100 க்கு அல்லது அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு மே மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிவரைக்கும் மட்டக்களப்பு கிழக்குப் பிரிவிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

2. இரு பிரதி கொண்ட வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசன உப பிரிவின் நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களிடமிருந்து 1960 ம் ஆண்டு மே மாதம் 12 ந் திகதி வியாழக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ள லாம். 1960 ம் ஆண்டு மே மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் பார்வையிடப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினுல் பிரசன்னமாயிருக்கலாம். கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் பெயரில் ரூபா 25 க்குப் பெறுமதியான காசுக் கட்டளையை அல்லது பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர் களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. மேற்கொண்டு விபரங்களை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்க லடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. ஜெயசிங்க,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
உறுகாம உப பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம்,
செங்கலடி, கி. மா.,
1960 ம் ஆம் ஏப்றில் மீ 1 ந் வ.

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## பிரசித்த ஏல விற்பனை

இதன் கீழ்க் குறிப்பிட்ட பொருட்கள் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 27 ந் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் கொழும்பு பார்சன் வீதி அரசாங்க பண்டகசாலைத் துறையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

2 கம்பர் கோக் மோட்டார் வாகனங்கள்.—நல்ல ஓடும் நிலபரத்தில் உள்ளன, தொப்பிகள், பிடவைகள்.—சீத்தை, பப்பிளின், அறக்கேஸ், காரிக்கன், சேலை, வேட்டி, சாரம், பனியன் முதலியன.

இப்பொருட்களை 26 ந் திகதி காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் பார்வையிடலாம்.

விற்பனை முடிந்தவுடன் பணம் கட்டி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

அரசாங்க பண்டகசாலைத்துறை,
கொழும்பு,
1960 ம் ஆம் ஏப்றில் மீ 8 ந் வ.

எல். ஏ. விஜயசிங்க,
அரசாங்க பண்டகசாலை அதிபர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது